IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, GUDIYATTAM, VELLORE DISTRICT.

**CC.No. 144/2020**

| **DEPOSITION OF WITNESS** | **PW.3** |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| NAME | முருகன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | கரியன் | RELIGION | |
| AGE | 72 | CASTE | |
| VILLAGE | குடியாத்தம் | OCCUPATION | வனத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 06.02.2024

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1.எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். புகார்தாரர் சொக்கலிங்கத்தின் வழக்கிற்காக சாட்சியம் அளிக்க அழைத்ததால் நான் வந்தேன்.

2. என்னை வழக்கறிஞர் சாட்சியம் அளிக்க எப்பொழுது என்று அழைத்தார் என்று ஞாபகம் இல்லை. நீதிமன்றத்திற்கு நானே வந்தேன். வழக்கறிஞர் அழைத்ததன் பேரில் நான் வழக்கறிஞரை பார்த்து விட்டு எனது வாக்கு மூலத்தில் அவரிடம் கூறினேன் அவர் அதை தயார் செய்து கொடுத்தார்.

3. 18.01.2024 ஆம் தேதி அன்று காலை 10.00 அல்லது 11.00 மணிக்கு வழக்கறிஞரை சென்று பார்த்தேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வராததால் நான் சாட்சியம் அளிக்க வரமாட்டேன் என்று நான் வழக்கறிஞரிடம் எதுவும் கூறிவில்லை.

4.நான் சொல்ல சொல்ல வழக்கறிஞர் அதை தட்டச்சு செய்தார் அதன் பின்பு நான் அதில் கையொப்பம் இட்டேன். தட்டச்சு செய்தது

அவரது அலுவலகத்தில் தான். 18.01.2024 அன்று நீதிமன்றத்திற்கு 10.00 மணிக்கு வந்தேன்.

5. 18.01.2024 அன்று 10.00 மணிக்கு நீதிமன்றத்திற்கு வந்து விட்டு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6.எதிரிக்கும் புகார்தாரருக்கும் என்ற வழக்கு என்று தெரியும். வீடு விற்பனை சம்பந்தமாக காசோலை விவகாரம் என்று தெரியும்.

7.சீனிவாச டிம்பருக்கும் புகார்தாரர் சொக்கலிங்கத்திற்கும் நேரடியாக என்ன பிரச்சனை இருந்தது என்றால் பண பிரச்சனை தான். அது புகார்தாரருக்கும் எதிரிக்கும் தான் பிரச்சனை என்றால் சரிதான்.

8.சீனிவாசா டிம்பர் என்பது அது பெயர் தான் பிரச்சனை ஜெயசங்கருக்கும் சொக்கலிங்கத்திற்கும் தான். சீனிவாசா டிம்பர் பெயரில் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

9. புகார்தாரர் சொக்கலிங்கத்திற்கு சொத்து வாங்கும் பிரச்சனை அவர் சொல்லி தான் எனக்கு தெரியும் எனென்றால் சரிதான். எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவர் சொல்லி தான் எனக்கு தெரியும். அது என்ன வீடு என்று நான் நேரடியாக சென்று பார்த்தேனா என்றால் நான் நேரடியாக சென்று பார்க்கவில்லை. அந்த வீட்டின் சர்வே எண். வீடு எண், தெருவின் பெயர் கட்டிடத்தின் பெயர் அதன் அளவு ஆகிய விவரங்கள் தெரியாது. வீடு பூந்தமல்லியில் உள்ளது என்று மட்டும் தெரியும். அளவு தெரியாது.

10. 05.10. என்று கூறிவிட்டு சாட்சி மீண்டும் 08.10.2018 அன்று காலை 8.00 மணி அளவில் ஜெய் சார் விடு சம்பந்தமாக பேசுவதற்கு டிப்போவிற்கு காலை 11.00 மணிக்கு என்னை வரச்சொன்னார்கள். என்னை போன் மூலமாக தகவல் கூறினார்கள். நான் 11.00 மணிக்கு மேல் ஜெய்சங்கர் டிப்போவிற்கு சென்றேன்.

11.அந்த ரூமில் புகார்தாரர் சொக்கலிங்கம், எதிரி ஜெயசங்கர் ஆகியோர் எதிரெதிரில் உட்கார்ந்து இருந்தார்கள் நான் சென்ற பிறகு பூபதி என்பவர் அங்கு வந்தார்.

12.பூபதி என்பவர் அக்ரிமெட்டில் 1 வது சாட்சி ஆவார். நான் அங்கு சென்ற பிறகு பூபதி சுமார் அரை மணி நேரம் கழித்து அங்கு வந்தார்.

13.நான் கொடுத்த முதல் பிரமாண வாக்கு மூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனது முதல் பிரமாண வாக்கு மூலத்தில் ஜெயசங்கர் டிப்போவிற்கு குறிப்பாக 11.30 மணிக்கு சென்றதாக கூறிவிட்டு தற்போது 11.00 மணிக்கு மேல் சென்றதாக தவறாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14.நானும் சொக்கலிங்கமும், பூபதியும் ஒரே துறையில் பணியாற்றினோம் என்றால் சரிதான். நான் குறைந்த பட்சம் 15 ஆண்டுகளாக கார்ட் ஆகவும், பாரஸ்டராகவும் சொக்கலிங்கத்தின் கீழ் வேலை செய்தேன் என்றால் சரிதான். புகார்தாரர் சொக்கலிங்கம் எனக்கு அதிகாரி மற்றும் நண்பர் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒரே ஊரில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

15.நானும், புகார்தாரர் சொக்கலிங்கமும், பூபதியும் பதிவு செய்யப்படாத பைனான்ஸ் தொழில் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத சீட்டு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

16.எதிரி ஜெயசங்கர் சுமார் 25 ஆண்டுகளாக பழக்கமானவர் அதை நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் கூறியுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

17. புகார்தாரரும் எதிரியும் முன்கூட்டியே வீட்டின் விலை பேசி முடிவு செய்து விட்டார்கள். அதன் பின்பு தான் நான் சென்றேன். நான் செல்வதற்கு முன்பே அவர்கள் பேசிமுடித்து விட்டதால் எனக்கு அந்த வீட்டில் விலை என்ன என்று தெரியாது என்றால் அவர்கள் இருவருக்கு விலை ஏற்கவே பேசிக் கொண்டார்கள். நாங்கள் சென்ற பிறகும் அது சம்பந்ததமாக விலை பேசி ரூபாய் 27 லட்சத்து 50 ஆயிரத்திற்கு விலை நிர்ணயம் செய்து அக்ரிமென்ட் செய்துக் கொண்டார்கள்.

18.ரூபாய் 27,50,000/- எதன் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் எவ்வளவு கட்டிடம் கட்டப்பட்டிருந்தது எந்த நிலையில் கட்டிடம் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

19.அவர்கள் இருவரும் விலை பேசி நிர்ணயம் செய்த பிறகு ஏற்கனவே வாங்கி வைத்திருந்த 20 ரூபாய் பத்திரத்தை மாறன் என்பவரை வரவழைத்து எப்படி எழுத வேண்டும் என்று தெரிவித்து அதன் பிறகு அதை ஒரு தாளில் எழுதி காண்பித்த பிறகு மாறன் அவர் அலவலகத்திற்கு சென்று அதை பத்திரத்தில் தட்டச்சு செய்து சுமார் 12.30 மணிக்கு எடுத்து வந்தார். அதன் பிறகு இருவரும் படித்து பார்த்தார்கள் அதில் பூபதி சாட்சியாகவும் நான் 2 வது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம்.

20.பத்திரத்தில் சுமார் 1.00 மணிக்குள் கையொப்பம் செய்திருப்பேன். ஒரு நபர் சொத்தை விற்பதாக இருந்தால் அவருடைய பத்திரத்தை அன்றே கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான்.

21.சீனிவாச டிம்பர் பெயரிலோ அல்லது ஜெயசங்கர் பெயரிலோ சொத்து இருப்பதாக ஆவணங்ள் கொடுத்தாரா என்றால் ஆவணங்களின் நகல்கள் கொடுத்தார். அதை படித்து காண்பித்தார் எழுத்தர் அதை படித்து காண்பித்தார்.

22. எதிரி ஜெயசங்கர் பெயரிலோ அல்லது டிம்பர் பெயரிலோ யாரிடமிருந்து, எப்போது எவ்வளவு ரூபாய்க்கு சொத்து வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

23. 08.10.2018 அன்று அக்ரிமெனட் போடப்பட்டது அக்ரிமென்ட் வாய்தா 31.12.2018 ஆகும்.

24.என்னை யார் என்று எதிரி ஜெயசங்கருக்கு தெரியாது என்றால் சரியல்ல. மாறன் என்ற நபர் எதிரிக்கு தெரியாது என்றாலும் மாறன் என்ற நபர் குடியாத்தத்தில் இல்லை என்றால் சரியல்ல.

25.புகார்தாரர் சொக்கலிங்கம் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பத்திரத்தை ஜெயசங்கரிடம் கொடுத்து அதை மாறன் தயார் செய்த அக்ரிமெட்டின் கையொப்பம் செய்தனர். 20 ரூபாய் பத்திரம் என்று தான்

பார்த்தேன் அது எங்கு யார் பெயரில் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

26.அந்த சொத்தில் ஏன்றனவே ஆகிஸ் வங்கியில் ஏற்கனவே கடன் இருக்கும் விவரம் கூறினார்கள். கடன் தொகை எவ்வளவு என்று தெரியாது. ரூபாய் 47 லட்சத்திற்கு அந்த வீட்டின் மீது கடன் உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

27. அந்த சொத்திற்கு அன்றைய தேதியில் என்ன சந்தை மதிப்பு என்று எனக்கு தெரியாது.

28.எனக்கு 4 பிள்ளைகள். 4 பிள்ளைகளின் பிறந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை.

29.புகார்தாரர் சொக்கலிங்கம் அக்ரிமென்ட் தேதியை சொல்லி கொடுத்து நான் சொல்கிறேன் என்றாலும் அந்த தேதியில் எந்த அக்ரிமென்ட்டும் போடவில்லை என்றால் சரியல்ல.

30.உண்மையில் அக்ரிமென்ட் இருந்திருந்தால் அதன் அசலை என்னிடம் காண்பித்தால் தான் அதில் எனது கையெழுத்து உள்ளதா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

31.மாறன் என்பவர் பத்திர எழுத்தர் ஆவார். அதனால் அவரை வைத்து பத்திரம் எழுதினோம் அவர் எனது நண்பர் இல்லை. மாறன் என்ற பத்திர எழுத்தரை அழைத்து விசாரித்தால் தான் உண்மை விவரம் தெரியவரும் என்றால் அது எனக்கு தெரியாது.

32.நான் எனது பேனாவினால் கையெழுத்து செய்தேன் பூபதி அவரது பேனாவில் கையொப்பம் செய்தார் அது எந்த வகையான இங்க் என்றால் நீல நிறம் தான். பூபதி என்ன நிற இங்கில் கையொப்பம் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் மை பேனாவில் கையொப்பம் செய்தேன்.

33.பூபதி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார். நான் தமிழிலில் கையொப்பம் செய்தேன். நான் மற்றும் பூபதியை தவிர எதிரி ஜெயசங்கர் மற்றும் புகார்தாரர் கையொப்பம் செய்தனர் எத்தனை தாளில் கையொப்பம் செய்தனர் என்று எனக்கு தெரியாது மாறனும் கையொப்பம் செய்தார்

மூவரும் என்ன இங்க் என்ன பேனாவில் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

34.அக்ரிமென்டில் கையெழுத்து போட்ட பின்பு தான் பணம் கொடுக்கப்பட்டது. சுமார் 1.00 மணிக்குள் கொடுத்தார். ஏற்கனவே பணம் எடுத்துக் கொண்டு வந்திருந்தனர். 500 ரூபாய் மற்றும் 100 ரூபாய் தாள்கள். எத்தனை 500 ரூபாய் நோட்டுக்கள் எத்தனை 100 ரூபாய் நோட்கள் என்று எனக்கு தெரியாது. எண்ணி பார்த்து தான் பணத்தை வாங்கினார்.

35.உண்மையில் அது போன்ற சம்பவம் நடந்திருந்தால் எத்தனை 500 ரூபாய் நோட்கடுக்கள் என்றும் எத்தனை 100 ரூபாய் நோட்டுக்கள் என்றும், சொத்து எந்த விதமான சொத்து என்ற விவரங்கள் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

36.அசல் பத்திரத்தை பார்க்காமலேயே நான் கையெழுத்து செய்தேன் என்று கூறும் சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்த வங்கி கிளையில் கடன் வாங்கி இருந்தார் என்ற விவரம் தெரியாது.

37.சொத்தின் கடன் தொகையே 47 லட்சம் இருக்கும் பட்சத்தில் ரூபாய் 27 லட்சத்து 50 ஆயிரத்திற்கு சொத்தை விற்பனை செய்வதாக சொல்வது அவரது சொத்தை அபகரிப்பதற்காக எனது நண்பர் என்பதற்காகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

38.அது போன்ற ஒப்பந்தம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் நான் சாட்சியம் அளித்தது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. M.N.Rajananhivarmasiva,
Judicial Magistrate (FAC)
Gudiyatham.